செ.வெ.எண்:78.˙.2016 நாள்:30.08.2016

பத்திரிகை செய்தி

சிவகங்கை மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் பரவுவதை தடுக்க ஆகஸ்ட் 29 முதல் வருகிற செப்டம்பர் மாதம் 2-ம் தேதி வரை சுகாதாரத்துறை மற்றும் ஊரக வளர்ச்சி ஊராட்சித் துறை இணைந்து 5 நாட்களுக்கு சுகாதார தூய்மைப் பணிகள் மேற்கொள்ள வேண்டும். 445 கிராம ஊராட்சிகளுக்கு உட்பட்ட ஊரக குடியிருப்பு பகுதிகளில் உள்ள நீர்த்தேக்கத் தொட்டிகளில் கிருமி நாசினிகளை தெளித்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்யப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

குடியிருப்புகளில் அருகில் உள்ள கழிவு நீர் கால்வாய்களின் அடைப்புகள் நீக்க வேண்டும். ஏடிஎஸ். லார்வா கொசுக்கள் உற்பத்தியை தடுக்க வீட்டின் அருகே உள்ள நீர் தேங்கும் தேவையற்ற பொருட்களை உடனடியாக அகற்ற வேண்டும். இதனால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து ஒலி பெருக்கி மூலமாகவும், விளம்பரங்கள், துண்டு பிரசுரங்கள் ஆகியவற்றை பொதுமக்களுக்கு வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். வட்டார வளர்ச்சி அலுவலர்கள், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், வட்டார சுகாதார மேற்பார்வையாளர்கள், சுகாதார ஆய்வாளர்கள் ஆகியோருடன் கிராம ஊராட்சி தலைவர்கள், துணைத் தலைவர்கள், வார்டு உறுப்பினர்கள், மகளிர் திட்ட கள அலுவலர்கள் ஆகியோர் ஒருங்கிணைந்து, ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் 20 தற்காலிக சுகாதார பணியாளர்கள் மற்றும் துப்புரவு பணியாளர்கள் ஆகியோருடன் இணைந்து சுகாதார பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலும், உதவி இயக்குநர் நிலையிலான மண்டல அலுவலர்கள் இப்பணிகள் நடைபெறுவதை கண்காணித்திடவும் உத்தரவிடப்பட்டுள்ளது. அரசு அலுவலர்களால் மேற்கொள்ளப்படும் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகளுக்கு முழு ஒத்துழைப்பு தர பொதுமக்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன் என மாவட்ட ஆட்சித் தலைவர் மலர்விழி இ.ஆ.ப அவர்கள் தெரிவித்துள்ளார்.

::வெளியீடு::

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,

சிவகங்கை.